சட்டப் பேரவை விதி எண்.110இன் கீழ்
மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 14–5–2008 அன்று
பேரவையில் படித்தளித்த அறிக்கை

****

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவை விதி எண். 110இன் கீழ் பேரவையிலே இந்த அறிக்கையினைப் படிக்க தங்கள் அனுமதி பெற்றுள்ளேன்.

இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள், தங்களுடைய தொகுதிகளில் நடைபெற்ற சில விபத்துக்களில் உயிரிழந்தவர்கள், இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது பலியானவர்களுடைய குடும்பத்தினருக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி அளிக்க வேண்டுமென்று கொடுத்த கோரிக்கைகளை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பி, அவர்களது அறிக்கைகளை பெற்று, அவற்றின் அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உதவிகள் அளிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. திண்டுக்கல் தொகுதி மார்க்சிஸ்ட் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர் செல்வி க. பாலபாரதி மற்றும் வேலூர் தொகுதி காங்கிரஸ் கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர் திரு சி. ஞானசேகரன் ஆகியோர் – மஞ்சள்காமாலை நோய்க்கான தடுப்பூசி போடப்பட்டதைத் தொடர்ந்து 26.4.2008 அன்று இறந்துபோன 11 மாத பெண் குழந்தை மாரியம்மாளின் குடும்பத்திற்கு நிதிஉதவி செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளனர். அவர்களது கோரிக்கையை ஏற்று, இறந்துபோன குழந்தையின் தந்தை திண்டுக்கல் பெரியார் காலனியைச் சேர்ந்த செருப்பு தைக்கும் தொழிலாளி திரு. முருகேசன் என்பவருக்கு ஒரு இலட்ச ரூபாய் நிதி உதவி முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

2. கபிலர்மலை தொகுதி பாட்டாளி மக்கள் கட்சி சட்டப்பேரவை உறுப்பினர் மருத்துவர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று – அவரது தொகுதியில் உள்ள பரமத்தி வேலூரில் 27.4.2008 அன்று நடந்த தீ விபத்தில் சவுக்கு மரக்கடைக்கு ஏற்பட்ட இழப்பின் தன்மை கருதி, அதன் உரிமையாளர் திரு. செந்தில்குமாருக்கு 25 ஆயிரம் ரூபாயும்; தீ விபத்தில் கார் பழுதுபார்க்கும் கடைக்கு ஏற்பட்ட இழப்பின் தன்மை கருதி அதன் உரிமையாளர் திரு. சீனிவாசனுக்கு 30 ஆயிரம் ரூபாயும்; தீ விபத்தில் மோகன் ஸ்பிரிங் பட்டறைக்கு ஏற்பட்ட இழப்பின் தன்மை கருதி அதன் உரிமையாளர் திரு. சேகருக்கு 15 ஆயிரம் ரூபாயும்; தீ விபத்தில் சக்திமுருகன் ஆட்டோ சென்டருக்கு ஏற்பட்ட இழப்பின் தன்மை கருதி, அதன் உரிமையாளர் திரு. ஆறுமுகத்திற்கு 20 ஆயிரம் ரூபாயுமாக மொத்தம் 90 ஆயிரம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படுகிறது.

3. தாராபுரம் தொகுதி திராவிட முன்னேற்றக் கழக சட்டப்பேரவை உறுப்பினர் திருமதி. பெ. பிரபாவதி மற்றும் காங்கேயம் தொகுதி காங்கிரஸ் கட்சி சட்டப்பேரவை உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் ஆகியோர் – 25.4.2008 அன்று விவசாயப் பணிக்குச் சென்ற ஏழை விவசாயக் கூலிகள் நான்கு பேர் சாலை விபத்தில் மரணமடைந்தனர் என்றும்; அவர்களது குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்க வேண்டுமென்றும் கோரிக்கை வைத்துள்ளனர். அந்த கோரிக்கையினை ஏற்று, சாலை விபத்தில் மரணமடைந்த திருமதி. மாசாத்தாள், செல்வி.உமாதேவி, திருமதி.பழனியம்மாள், திருமதி. பாக்யலட்சுமி ஆகியோரது குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் இரண்டு இலட்ச ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது.

4. பூவிருந்தவல்லி தொகுதி காங்கிரஸ் கட்சி சட்டப் பேரவை உறுப்பினரும், சட்டப் பேரவை காங்கிரஸ் கட்சித் தலைவருமான திரு டி. சுதர்சனம், கும்மிடிப்பூண்டி தொகுதி அ.தி.மு.க.வைச் சார்ந்த சட்டப்பேரவை உறுப்பினர் திரு கே. எஸ். விஜயகுமார், பொன்னேரி தொகுதி அ.தி.மு.க.வைச் சார்ந்த சட்டப்பேரவை உறுப்பினர் திரு பி. பலராமன், திருவள்ளூர் தொகுதி திராவிட

முன்னேற்றக் கழக சட்டப்பேரவை உறுப்பினர் திரு இ.ஏ.பி. சிவாஜி ஆகியோர் – 26.4.2008 அன்று திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பூச்சி அத்திப்பட்டு கிராமத்தில் முனுசாமியின் மகன்கள் 10 வயது சிவா மற்றும் 8 வயது விஷ்ணு குளிக்கச் சென்றபோது கால்வாய் புதைகுழியில் சிக்கி இறந்து விட்டதால், குழந்தைகளின் தந்தை திரு. முனுசாமி என்பவருக்கு நிதிஉதவி வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளனர். அதனை ஏற்று, இரண்டு குழந்தைகளை இழந்துள்ள திரு. முனுசாமிக்கு ஒரு இலட்ச ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படுகிறது.

5. 27.4.2008 அன்று காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கீழ்பேரமநல்லூர் காலனியில் உள்ள தாமரைக் குளத்தில் மூழ்கி செல்வி எஸ். நித்யா மற்றும் செல்வி. நந்தினி ஆகிய இரண்டு மாணவிகள் இறந்து விட்டனர். மகள்களை இழந்த குடும்பங்களுக்கு நிதிஉதவி அளித்திட வேண்டுமென்று காஞ்சிபுரம் தொகுதி பாட்டாளி மக்கள் கட்சி சட்டப்பேரவை உறுப்பினர் திருமதி.பெ.கமலாம்பாள் அவர்களது கோரிக்கையை ஏற்று – அந்த இரண்டு குடும்பங்களுக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் ஒரு இலட்ச ரூபாய் நிதிஉதவி வழங்கப்படுகிறது.

6. கடலூர் தொகுதி திராவிட முன்னேற்றக் கழக சட்டப்பேரவை உறுப்பினர் திரு கோ. அய்யப்பன், செங்கல்பட்டு தொகுதி பாட்டாளி மக்கள் கட்சி சட்டப் பேரவை உறுப்பினர் திரு கி. ஆறுமுகம் மற்றும் பண்ருட்டி தொகுதி பாட்டாளி மக்கள் கட்சி சட்டப்பேரவை உறுப்பினர் திரு தி. வேல்முருகன் ஆகியோர் – கடலூர் தொகுதியைச் சேர்ந்த அன்பரசன் என்பவர் இலங்கையில் வேலை பார்த்து வந்தபோது 23.4.2008 அன்று இறந்துபோனதாகவும், அவரது குடும்பத்திற்கு நிதிஉதவி வழங்கிட வேண்டுமென்றும் கோரிக்கை வைத்துள்ளனர். அதனை ஏற்று, உயிரிழந்த அன்பரசன் குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் நிதிஉதவி வழங்கப்படுகிறது.

7. தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், செட்ரப்பட்டி ஊராட்சியைச் சார்ந்த சண்முகம் தனது குடும்பத்துடன் மொரப்பூர் காவல் நிலையத்திற்கு 8.4.2008 அன்று சென்றபோது அவரது 4 வயதுடைய குழந்தை தண்ணீர் என நினைத்து தவறுதலாக பெப்சி பாட்டிலில் இருந்த அமிலத்தை குடித்ததன் காரணமாக சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டு சிகிச்சை பலனின்றி 9.4.2008 அன்று இறந்துள்ளது. அந்த குழந்தையின் குடும்பத்தின் வறிய நிலையைக் கருத்தில் கொண்டு நிதி உதவி வழங்கிட வேண்டுமென பல்லடம் தொகுதி அ.தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர் திரு செ.ம. வேலுசாமி, சென்னை–ஆர்.கே. நகர் தொகுதி அ.தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர் திரு பி.கே. சேகர்பாபு, சேலம்–1 தொகுதி அ.தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர் திரு எல். ரவிச்சந்திரன் மற்றும் பாலக்கோடு தொகுதி அ.தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர் திரு கே.பி. அன்பழகன் ஆகியோரது கோரிக்கையினை ஏற்று – உயிரிழந்த குழந்தை சன்மதியின் குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் நிதிஉதவி வழங்கப்படுகிறது.

8. ஒட்டன்சத்திரம் தொகுதி திராவிட முன்னேற்றக் கழக சட்டப்பேரவை உறுப்பினரும், அரசு தலைமைக் கொறடாவுமாகிய திரு.அர.சக்கரபாணி – திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், தும்பிச்சிபாளையம் கிராமத்தில் 7.5.2008 அன்று கிணற்றில் தவறிவிழுந்து நீரில் மூழ்கி இறந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த செல்வி. சிவலட்சுமி மற்றும் செல்வன். காளீஸ்வரன் ஆகியோரின் குடும்பத்திற்கும், அதே நிகழ்வில் இறந்துபோன செல்வகுமார் குடும்பத்திற்கும் நிதிஉதவி வழங்கிட வேண்டுமென அளித்த கோரிக்கையை ஏற்று – உயிரிழந்த இரண்டு குழந்தைகளின் தந்தை திரு. பெரியசாமிக்கு ஒரு இலட்ச ரூபாயும்; செல்வகுமாரின் தந்தை திரு.செல்லமுத்துவிற்கு 50 ஆயிரம் ரூபாயும் நிதிஉதவி வழங்கப்படுகிறது.

9. மேலும், இதே உறுப்பினர் ஒட்டன்சத்திரம் வட்டம், சின்னகாம்பட்டி கிராமத்திற்கு அருகே 13.4.2008 அன்று டிராக்டர் கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்த

செல்வி சுகன்யா, திருமதி.முருகம்மாள், திருமதி.மல்லிகா, திருமதி வீரமாத்தி ஆகிய நான்கு பேரின் குடும்பங்களுக்கும்; மேலும் அந்த விபத்தில் காயமடைந்த மூன்று பேருக்கும் நிதிஉதவி வழங்கிட வேண்டுமென கோரிக்கை அளித்துள்ளார். அந்த நிகழ்வில் மரணமடைந்த திருமதி.முருகம்மாள் மற்றும் திருமதி.மல்லிகா ஆகிய இருவரின் குடும்பங்களுக்கு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் தலா ஒரு இலட்சத்து இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. விபத்தில் மரணமடைந்த சுகன்யா மற்றும் வீரமாத்தி ஆகிய மற்ற இருவர் குடும்பங்களுக்கும் தலா 50 ஆயிரம் ரூபாயும்; காயமடைந்த திருமதி.ராஜேஸ்வரி, திருமதி.லட்சுமி, திரு.பழனிச்சாமி ஆகிய மூவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபாயும் நிதி உதவியாக வழங்கப்படுகிறது.

10. மேட்டூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினரும், பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டப்பேரவைத் தலைவருமான திரு கோ.க.மணி, அதே கட்சியைச் சேர்ந்தவர்களான செங்கல்பட்டு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் திரு கி.ஆறுமுகம், காஞ்சிபுரம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் திருமதி.கமலாம்பாள் மற்றும் திருப்போரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு டி.மூர்த்தி ஆகியோர் – காஞ்சிபுரம் நசரத்பேட்டை ஊராட்சி எல்லைக்குட்பட்ட கிராமத்தில் 8.5.2008 அன்று நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த செல்வி ஷோபனா குடும்பத்திற்கு நிதிஉதவி வழங்கவேண்டுமென அளித்துள்ள கோரிக்கையினை ஏற்று – உயிரிழந்த ஷோபனாவின் தந்தை திரு.முருகன் என்பவருக்கு ஒரு இலட்ச ரூபாய் நிதிஉதவி வழங்கப்படுகிறது.

11. கோவை, அவினாசி சாலையில் இயங்கிவரும் கூர்நோக்கு இல்லத்தில் சிறுவன் முபாரக் அலி 7.5.2008 அன்று இறந்தது தொடர்பாக அவரது குடும்பத்திற்கு நிதிஉதவி வழங்கவேண்டுமென தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் கோவை மாவட்டத் தலைவர் திரு ஆ. அப்துல் பகூர் அரசுக்குக்

கோரிக்கை அளித்துள்ளதையொட்டி, இறந்துபோன சிறுவன் முபாரக் அலியின் குடும்பத்திற்கு ஒரு இலட்ச ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது.

12. காவேரிப்பட்டணம் தொகுதி, பா.ம.க. உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன் நேற்றையதினம் என்னிடம் கொடுத்த கோரிக்கையையேற்று, அவரது தொகுதியிலுள்ள திம்மாபுரம் கிராமத்தில் 29–4–2008 அன்று பலத்த சூறாவளி காற்றில் தென்னை மரம் வேரோடு சாய்ந்ததில் ஏழு வயது சிறுமி ஒருவர் பலத்த அடிபட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டும் அங்கே சிகிச்சை பலனின்றி இறந்து விட்ட – சுவேதாவின் குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது.

மேலும், ஆற்காடு தொகுதி பாட்டாளி மக்கள் கட்சி சட்டப்பேரவை உறுப்பினர் திரு கே.எல்.இளவழகன், சென்னை–ஆர்.கே.நகர் தொகுதி அ.தி.மு.க.வைச் சேர்ந்த சட்டப்பேரவை உறுப்பினர் திரு பி.கே.சேகர்பாபு மற்றும் சேலம்–1 தொகுதி அ.தி.மு.க.வைச் சேர்ந்த சட்டப்பேரவை உறுப்பினர் திரு எல்.ரவிச்சந்திரன் ஆகியோர் – வேலூர் மாவட்டம், ஆம்பூர், சாணாங்குப்பம் கிராமத்தில் 29.4.2008 மின்கம்பி அறுந்து விழுந்து மின்சாரம் பாய்ந்து இறந்துபோன திருமதி. அம்மு மற்றும் திருமதி.ஜானகி ஆகிய இருவர் குடும்பத்திற்கும் நிதிஉதவி வழங்க கோரியுள்ளனர். அவர்களது குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்ச ரூபாய் அரசின் சார்பில் நிதிஉதவி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

தளி தொகுதி, அஞ்செட்டி வனசரகத்தில், மஞ்சுகாப்பு காட்டில் 24.4.2008 அன்று காட்டு யானை மிதித்து இறந்து போன துரைசாமி என்பவரின் குடும்பத்திற்கு நிதிஉதவி வழங்ககிட வேண்டுமென தளி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் திரு டி.ராமச்சந்திரன் கோரியுள்ளார். இறந்துபோன துரைசாமியின் குடும்பத்திற்கு ஒரு இலட்ச ரூபாய் நிதிஉதவி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

தொண்டாமுத்தூர் தொகுதி ம.தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர் திரு மு.கண்ணப்பன், செங்கற்பட்டு தொகுதி பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்

திரு கி.ஆறுமுகம் ஆகியோர் – கோவை அருகே பெரியதடாகம் பகுதியில் உள்ள அனுவாவி சுப்ரமணியசுவாமி கோவில் காவலாளி சுப்பிரமணியம் என்பவர் 28.4.2008 அன்று யானை மிதித்து உயிரிழந்துள்ளதால், அவரது குடும்பத்திற்கு நிதிஉதவி வழங்கிட வேண்டுமென கோரியுள்ளனர். இறந்துபோன சுப்பிரமணியம் குடும்பத்திற்கு வனத்துறையின் சார்பாக ஒரு இலட்ச ரூபாயும், இந்துசமய அறநிலையத்துறையின் சார்பாக ஒரு இலட்ச ரூபாயும், ஆகமொத்தம் இரண்டு இலட்ச ரூபாய் ஏற்கனவே நிதிஉதவியாக வழங்கப்பட்டுள்ளது என்பதையும் பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை தவிர, பா.ம.க. உறுப்பினர் திரு. வேல்முருகனின் கோரிக்கையை யேற்று பண்ருட்டி தொகுதியில் இடி தாக்கி இறந்த ராணி என்ற பெண்மணியின் குடும்பத்திற்கு 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் 1–4–2008 அன்றும்;

சி.பி.எம். உறுப்பினர் திருமதி லீமாரோஸ் அவர்களின் கோரிக்கையின் பேரில் திருவட்டாறு தொகுதியில் இடி தாக்கி இறந்த இருவருடைய குடும்பங் களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 7–4–20008 அன்று இரண்டு இலட்சம் ரூபாயும்,

பா.ம.க. உறுப்பினர் திருக்கச்சூர் ஆறுமுகம் அவர்களின் கோரிக்கையை யேற்று செங்கற்பட்டு தொகுதியில் ஏரியில் மூழ்கி இறந்த 3 மாணவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் வீதம் 24–4–2008 அன்று மூன்று இலட்சம் ரூபாயும்,

விழுப்புரம் மாவட்டம், சாரம் கிராமத்தில் 23–4–2008 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்த திண்டிவனம் வட்டாட்சியர் ஆர். சுப்பிரமணியம், திண்டிவனம் வட்டாட்சியர் அலுவலக உதவியாளர்கள் எஸ். பன்னிர்செல்வம், டி. ஏழுமலை ஆகியோரின் குடும்பங்களுக்கும், காயமடைந்த திண்டிவனம் கோட்டாட்சியர் திரு. எஸ். கேப்ரியல் மற்றும் ஓட்டுநர் திரு. குணசேகரன் ஆகியோருக்கும் 24–4–2008 அன்று பன்னிரண்டு இலட்சம் ரூபாயும்,

தட்டம்மை தடுப்பூசி ஒவ்வாமையால் உயிரிழந்த குழந்தைகள் நந்தினி, பூஜா, மோகனப்பிரியா, லோகேஷ் ஆகிய நான்கு குழந்தைகளின் குடும்பங் களுக்கு தலா 3 லட்சம் ரூபாய் வீதம் 24–4–2008 அன்று 12 இலட்சம் ரூபாயும்,

7–5–2008 அன்று இதே அவையில் நான் படித்த அறிக்கைப்படி 10 லட்சத்து 75 ஆயிரம் ரூபாயும்,

விழுப்புரம் மாவட்டம், காட்டுக் கோட்டையில் நீச்சல் கற்பதற்காகச் சென்று ஆற்றுக் குட்டையில் மூழ்கி இறந்த தமிழரசன், செந்தமிழ்ச் செல்வன், தேன்மலர், ஜீவிதா, சரிதா, கவிதா ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் மூன்று இலட்சம் ரூபாயும் –

ஆக மொத்தம் இந்தக் கூட்டத் தொடரில் மட்டும் பல்வேறு சட்டப் பேரவை உறுப்பினர்களின் கோரிக்கைகளையேற்று 55 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் முதல் அமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து அளிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

..................................................................